# நடமாடும் கோயில்கள் நாசமடைகின்றன


Regd; No. M. 5458 Phone: No. 4502

விலை அரை அணா இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

| | | |
|---|---|---|
| மாலை 2 | சென்னை 7—12—50 | மணி 6 |


## மத்திய ஆட்சியின் மாற்றாந்தாயன்பு

(0)

### சென்னையின் நூல் கோட்டாவை பாதியாகக் குறைத்தாராம்

(0)

### நம் நாட்டு நூலை வாங்கிக்கொண்டு நமக்கே பட்டை நாமம் தீட்டுவதா?

சென்னை மாகாணத்துக்கு அளிக்கப்படும் நூல் கோட்டாவைப் பாதியாகக் குறைத்துவிடப் போவதாக மத்திய அரசாங்கம் சென்னை அரசாங்கத்துக்கு அறிவித்திருப்பதாகவும், இவ்வாறு செய்யவேண்டாமென்று சென்னை அரசாங்கம் விண்ணப்பித்துக்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

சென்னை மாகாணத்தில் கைத்தறி நெசவாளர்கள் மிகப் பெரும்பாலோராவர். மக்கள் தொகையில் உழவர்களும் நெய்பவர்களுமே பெரும்பான்மையினர். ஆயின் இவர்களனைவரும் ஏழைகள். எனவேதான் மத்திய அரசாங்கம் இவர்கள் வயிற்றில் மண்ணைப் போடும் வேலையைத் துணிகரமாகச் செய்ய முன்வந்திருக்கிறது.

மேலும் சென்னை அரசாங்கம் சொன்னபடி வாய்மூடி வேலை செய்யும் என்று அந்த மத்திய அரசாங்கத்தினர்கள் தெரிந்துகொண்டிருக்கின்றார்கள். எனவே தான் நூல் கோட்டாவைப் பாதியாகக் குறைத்திருப்பதாகக் கூறும் துணிவு அவர்களுக்கேற்பட்டிருக்கிறது.

இப்போது ஜவுளி நூல் விநியோகம் செய்யும் வேலையை அரசாங்கமே ஏற்று நடத்தப் போவதாகத் தெரிகிறது. நாட்டு மக்கள் உயிர் வாழ வேண்டும் என்பதில் காங்கிரஸ் அரசாங்கம் சிறிதேனும் அக்கரையுடையதாயிருந்தால், மத்திய அரசாங்கத்தை எதிர்த்து நின்றேனும், கட்டாயப்படுத்திப் பணிய வைத்தேனும் நம்மவர்களுக்கு வேண்டிய நூலை நம் நாட்டிலிருந்து வெளியே போகாதபடி தடை செய்து நிறுத்திக்கொள்ளவேண்டும்.

சென்னை மாகாணத்தில் இம்மாகாண நெசவாளர்கள் அனைவருக்கும் போதுமான அளவு நூல் உற்பத்தியாகிறது. ஆனால், இவ்வளவு நூலையும் மத்திய ஆட்சியினர் நம்மிடமிருந்து பறித்துச் சென்று, கோட்டா வகுத்து மாகாணங்களுக்கு விநியோகம் செய்கின்றனர். அவ்வாறு செய்கையில் நூலை உற்பத்தி செய்திருக்கும் நம் மாகாணத்துக்குரிய கோட்டா நம்


(3-ம் பக்கம் பார்க்க)


—

## நாட்டுத் தலைவர் தனித்து வணங்க 2 லக்ஷம் ரூபாயில் கோவிலாம்

(0)

### கிறித்தவக் கோவிலிருக்கையில் இந்துக் கோவில் ஒன்று வேண்டாமா?

(0)

### சமயச்சார்பற்ற அரசாங்கத்தில் நடைபெறும் வேடிக்கைகள்

இந்தியா பல சமய மக்களைக்கொண்ட நாடு. இங்கு நடைபெறும் அரசாங்கம் எச்சமயத்தைச் சார்ந்ததாகவும் இருத்தல் கூடாதென்றும், சமயச் சார்பற்ற முறையில் அரசாங்கம் நடத்தப்பட வேண்டுமென்றும் கருதப்பட்டு, அதற்கேற்ப அரசியல் திட்டம் வகுக்கப்பட்டது.

ஆனால் நாட்டுத் தலைவர் தோழர் இராஜேந்திரர் தனித்து நின்று வணங்குவதற்கென அரசாங்க மாளிகையில் 2 லக்ஷம் ரூபாய் செலவில் ஒரு கோவில் கட்டுவது பற்றி போதிக்கும் செய்தி "பிளிட்ஸ்", மூலம் அறியக் கிடக்கிறது.

முன்னரே, அங்கு ஒரு கிறித்துவக் கோவில் இருப்பதால், இந்தக் கோவிலும் ஒன்றிருக்க வேண்டும் என்று காரணம் கூறப்படுவதாகத் தெரிகிறது,

நாட்டிலே, நடமாடும் கோவில்களாக விளங்கும் மக்கள் பலர் வறுமையால் வாடி வதங்குகையில், அவர்களை முன்னேற்றுவிப்பதற்கான வழிகளைச் சிந்திக்காமல், கோயில் கட்டுவது, கோபுரம் எழுப்புவதான காரியங்களில் சிந்தனைகளைச் செலுத்தி, பணத்தைச் செலவிட முயலும் இத் தலைவர்களின் போக்கை என்னென்பது!

இந்தியக் குடியரசுநாட்டின் தலைவராக வந்துள்ள பாபு ராஜேந்திர பிரசாத் ஆழ்ந்த சமயப்பற்றுடையவர். எனவே நாள்தோறும் பிர்லா மந்திர் சென்று லக்ஷ்மிநாராயண் கோவில் சாமியை வணங்கிவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தினந்தோறும் இவ்வண்ணம் செல்வதைவிட, அரசாங்க மாளிகையிலேயே ஒரு கோவிலைக் கட்டிவிட்டால் எளிதாக இருக்குமென்றும், இப்படி ஒரு கோவிலைக் கட்டிவிட்டால் இனிவரும் தலைவர்களுக்கும் இருந்தவிடத்திலேயே இறைவனை வணங்க வசதி ஏற்பட்டுவிடுமென்றும் கருதினார் தலைவர். உடனே தம் இராணுவக்காரியதரிசியை அழைத்து, அதற்காகச் சிறந்த சிற்பிகளை வரவழைத்துக் கட்டிட அமைப்பை வரையுமாறு கட்டளையிட்டார்.

தலைவர் கட்டளைப்படி வரையப்பட்டவைகளுள் இராணுவக் காரியதரிசி மூன்றினைத் தேர்ந்தெடுத்தார். அம்மூன்றனுள் ஒன்று ஒரு லட்சம் ரூபாய் செலவுடையது; மற்றொன்று ஒன்றேகால் லட்சம் ரூபாய் செலவுடையது; இன்னொன்று 2 லக்ஷம் ரூபாய் செலவுடையது. இந்தக் கோவிலைக் கட்ட அரசாங்க மாளிகையின் நர்சரியில் இடம் ஒதுக்கப்பட்டது.

ஆனால், இதற்குப் பணத்திற்கு எங்குப் போவது என்பது தெரியாத இராணுவக் காரியதரிசி, முதலமைச்சரிடம் இதைக் கூற, அவர் இதற்கு இணங்கவில்லையாம். சமயச்சார்பற்ற வகையில் அரசாங்க மாளிகை இருக்கவேண்டும் என கூறிவிட்டாராம். ஆனால் அ சும்மாவிடப்படவில்லை. அரசாங்க மாளிகையில் கிறித்தவக்கோ இருக்கும்போது, இந்து சமய கோயில் இருப்பதற்கு ஆட்


(4-ம் பக்கம் பார்க்க)


—

## குறைந்த செலவில் கல்வி பெறமுடியாது

(o)

### பள்ளிக்கூட சம்பளமாகப் பொது மக்கள் பணம் தரவேண்டும்

(:0:)

### கல்வியில்லா நாட்டில் கல்வி பரப்பும்முறை

எட்டாவது வகுப்புக் கல்விவரை பொறுப்புடைய உதவி டைரெக்டர் கோவையில் ஆசிரியர்கள் மாநாட்டில் பேசுகையில், "கல்வியைக் குறைந்த செலவில் பெற்றுக்கொள்வதென்பது முடியாதசெயல். பெற்றோர் நேரடியாகப் பள்ளிச் சம்பள வடிவத்தில் பெருந்தொகை கொடுத்தாகவேண்டும். இல்லையெனில், வரிகள் வடிவத்தில் பணம் கொடுத்தாக வேண்டும். இதைத் தம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க விரும்பும் பெற்றோர்களுக்கு எடுத்துக் கூற வேண்டியது ஆசிரியர்களுடைய கடமையாகும்" என்று கூறியிருக்கிறார்.

முன்னேற்றம் அடைந்த நாடுகள் பலவற்றுள் எட்டாவது வகுப்பு வரை கல்வி இலவசமாகவே கற்பிக்கப்பட்டு வருகிறது. 1944-ல் செய்யப்பட்ட பட்லர் ஆக்டினும், இத்தகைய எட்டாம் வகுப்பு வரையுள்ள கல்வி இலவசமாகவே இருக்கவேண்டுமென்று தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் அரசியல் திட்ட


2-ம் பக்கம் பார்க்க

# மாலைமணி

சென்னை 7—12—50 வியாழக்கிழமை


## காங்கிரஸ் சர்வாதிகார வெறி

### (2)

திராவிட இயக்கத்தினர் மீது காங்கிரஸ் ஆத்திரங்கொண்டு இதையழிக்கச் சதி செய்ய வேண்டிய தேவை என்ன ஏற்பட்டு விட்டது என்று கருதலாம். திராவிட இயக்கத்தினர் பதவியை விரும்பவில்லை. தேர்தலில் நிற்பதையே விரும்பாதவர்கள். ஆனால், நாட்டு மக்களின் அறிவையோ, வாழ்க்கை நிலையையோ பாதிக்கக் கூடியவைகளை வன்மையாகக் கண்டிக்கப் பின்வாங்குவதில்லை, மக்களுடைய சிந்தனா சக்தியைப் பெருக்கி, பகுத்தறிவுக் கண்கொண்டு எதனையும் ஆராய்ந்து முடிவு காணும் ஆற்றலை மக்களிடையே உண்டுபண்ணி வருவதில் திராவிடர் இயக்கம் மும்முரமாக இறங்கி வேலை செய்து வருகின்றது.

இதனால், மக்கள் பகுத்தறிவுடன் சிந்திக்கத் தொடங்கி, சூழ்ச்சிகளை, வஞ்சகத்தை எளிதில் அறிந்துகொண்டு அவற்றிற்காளாகாதபடி தப்பிவிட முடிகின்றது.

மக்களனைவரும் இவ்வாறு ஆகிவிட்டால், ஏமாற்றுவது, பொய்யான வாக்குறுதிகளைக் கொடுப்பது, வீண் பழி சுமத்துவது, பொய்ப் பிரசாரம் செய்வது முதலியவற்றைப் போர்க் கருவிகளாக வைத்துக்கொண்டு தேர்தலில் வெற்றிபெற நாடுபவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும். எனவே, மக்களை இவ்வாறு அறிவுக் கண்கொண்டு பார்ப்பவர்களாக ஆக்கி வரும் திராவிடர் இயக்கம் அழிக்கப்பட்டுத் தீர வேண்டும்—தாங்கள் மீண்டும் பதவி பெற வேண்டுமானால்.

திராவிடர் இயக்கம், ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருப்பவர்கள் செய்யும் தில்லுமல்லுகளை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்து, மக்களுக்கு அவற்றை எடுத்து விளக்கி வருகின்றது. அரசாங்கத்தினர் மக்கள் நன்மையை அசட்டை செய்யும் சந்தர்ப்பங்களையும் எடுத்து விளக்கி வருகின்றனர். எனவே, திராவிடர் இயக்கம் உயிரோடிருந்தால், தங்கள் வண்டவாளங்கள் வெளிப்பட்டுக்கொண்டே யிருக்குமாதலின், திராவிடர் இயக்கத்தை நசுக்கியாதல் வேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் கருதுகின்றனர்.

திராவிடர் இயக்கம் வடநாட்டு ஆட்சியாளர், திராவிடநாட்டு மக்கள் விஷயத்தில் எவ்வாறு நடந்து வருகின்றனர் என்பதைக் கூர்ந்து கவனித்து வருகின்றது, அவர்கள் நம்மவர்களைச் சுரண்டிச் செல்லும் கொடுமையினை எடுத்து விளக்குகின்றனர். வடநாட்டவருக்கு நம்மவர் அடிபணிந்து நடக்கக் கூடாதென்றும், நாம் முழு உரிமையுடையவர்களாக வாழ்ந்தே தீரவேண்டுமென்றும் நம் உரிமை ஒருக்காலும் பலியிடப்படக் கூடாதென்றும் திராவிட இயக்கம் மக்களிடையே கூறி வருகிறது. எனவே, இந்த இயக்கம் இவ்வாறு மக்கள் முழு உரிமையுடையவர்களாக இருக்குமாறு உணர்ச்சியூட்டி வந்தால், வடநாட்டாரிடம் தங்கள் செல்வாக்குப் பெறவோ, சலுகை பெறவோ, தங்களளவில் தங்களை உயர்த்திக் கொள்ளவோ முடியாமற் போகிறதென்பதைக் காங்கிரஸ்காரர்கள் உணருவதால் இந்தத் திராவிடர் இயக்கம் அழிக்கப்பட்டாக வேண்டும்—அதுவும் பொதுத் தேர்தல் வரு முன் அழிக்கப்பட்டாக வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் கருதுகின்றனர்,

எனவே, இந்தக் கருத்துகளுடன், தக்க விளம்பரம், ஆரவாரம் முதலியவற்றுடன் 4-12-50 முதல் ஒரு மாத காலம் வரை திராவிட இயக்கத்தினரைத் தாக்கிப் பேசி அழித்துவிட வேண்டுமென்று, சென்னையில் இரகசியமாகக் கூடிய காங்கிரஸ் தலைவர்கள் திட்டமிட்டிருக்கின்றனர் போலும்! ஆனால் பாவம்! திராவிடர் இயக்கம் இவர்கள் எண்ணுவது போன்று தாக்கிப் பேசி அழிக்கக் கூடிய இயக்கமாக இல்லையென்பதைத் தொண்டை வரள, நா உலர, [illegible]ம் போனபடி பேசிப் பிரசாரம் செய்த பின் காங்கிரஸ் தோழர் [illegible] அறிந்துகொள்வார்கள் என்று நம்புகிறோம். அறிந்து திருந்தி[illegible]வார்கள் என்று நாம் கருதவில்லை, அதற்குப் பின் பல முறை [illegible] கையாண்டு பார்ப்பதென்று அவர்கள் திட்டமிட்டிருப்ப[illegible] தெரிகிறது. அது உண்மையாயிருக்குமானால், அவர்களு[illegible] கண்டு நாம் பரிதாபப்படுகிறோம்.

## இதாலிய கணித மேதை காலமானார்

பாரிஸ், டிச. 6—

இப்போது இந்திய கணித மேதை திருமதி சகுந்தலா தேவியைப் போல எப்பேர்ப்பட்ட கணக்கையும் ஒரு வினாடியில் போட்டு சரியான விடை கொடுக்கப் படுப வருமான ஜாக்வெஸ் கினாடி என்கிற இதாலியர் தன் 83 வயதில் மாண்டார்.

இவருக்கு 30 வயதுவரை எழுதப் படிக்கத் தெரியாதாம். ஆனால் சிறுபையனாக இருக்கும்போதுதான் மேய்க்கும் ஆட்டு மந்தைகளிலுள்ள ஆடுகளை எண்ணி எண்ணியே இவர் கணக்கில் நிபுணராகிவிட்டாராம்

இவர் பிரான்ஸிலேயே வாழ்ந்து வந்தார். அமெரிக்காவில் இவர் கணக்கு போடும் இயந்திரங்களையும் திணர அடித்து அவைகளுக்குமுன் சரியான விடை கொடுத்தாராம்.

1837-ல் ஜனவரி 17உ என்ன கிழமை என்று கேட்டால் உடனேயே அவர் சொல்லிவிடுகிறாராம்.

## உணவு இலாகா நிர்வாகத்திற்கு ஒரு கோடிக்குமேல் செலவு

சென்னை அரசாங்கம் உணவுக் கட்டுப்பாட்டு இலாக்காவை நிர்வகிப்பதற்கென்று ஆண்டு தோறும் ஒரு கோடிக்கு மேல் (ரூ. 1,00,57,949) செலவிட்டு வருகின்றது என்று சென்னைச் சட்டசபையில் அறிவிக்கப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து ஏராளமாக அரிசியை வரவழைக்க வியாபாரிகளுக்கு அனுமதியளித்துவிட்டால் நாட்டிலே கண்ட்ரோல்களுக்கு வேலையில்லாமற்போய்விடும். ஆனால் அதற்கு நம் அரசாங்கம் சக்தியற்றுப்போய்க் கிடக்கிறது. அதே போன்று உணவுக் கட்டுப்பாடு விஷயத்தைக் கவனிப்பதற்கு, அரசாங்கம் ஒரு தனி இலாக்காவை வைத்துப் பெருந்தொகை செலவிட்டுக் கொண்டிருக்கவேண்டியதில்லை. அரசாங்க ரெவினியூ இலாக்காவே இதைக் கவனிக்கலாம். ஆனால் அதுவும் சென்னை அரசாங்கத்திற்கு இயலாத காரியமாகத் தோன்றுகிறது.

ஒரு கோடி ரூபாய் செலவில் நிர்வகிக்கப்படும் இந்த இலாக்கா இருந்தும் கண்ட்ரோல் விஷயங்கள் திருப்திகரமாக நடைபெறுவதாகத் தெரியவில்லை. கள்ள ரேஷன் கார்டுகள், பதுக்கல்கள் உணவில் கள்ளச்சந்தை வர்த்தகங்கள் முதலியவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. செலவுதான் பெருகுகின்றதேயொழிய பிள்ளையை பிழைக்க வைக்க முடியவில்லை.

## 33000 ஆண்டுகளுக்கு முன்பே பறக்கும் தட்டு!

ஸைப்பிரஸில் சில பிரிட்டிஷ் புதை பொருள் ஆராய்ச்சி மாணவர்கள் பறக்கும் தட்டு உருவம் கொண்ட சில பழைய கால ஸீல்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

கற்களால் செய்யப்பட்ட இந்த முத்திரைகளில் இரக்கைகள் கொண்ட வட்ட வடிவமான தட்டு[illegible]ம் காணப்படுகிறதாம்.

## சனிக்கிரகத்திலிருந்து விழுந்த பனிப்பாறை?

லண்டன், டிச. 6—

சனிக்கிரகத்திலிருந்து பனிக் கட்டிகள் பூமிமீது பாய்கின்றனவா என்ற கேள்வி இப்போது வான ஆராய்ச்சியாளரிடையே ஏற்பட்டிருக்கிறது.

விமான நிபுணர்கள் விமானத்திலிருந்து கொட்டப்பட்ட தண்ணீரே பனிப்பாறையாக மாறிவிழுந்திருக்க வேண்டும் என அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆனால் வான ஆராய்ச்சியாளர்கள் சனிக்கிரகத்தைச் சுற்றி பனிக் கட்டிகள் ஒட்டிக்கொண்டிருப்பதாகவும், சனிக்கிரகமே பனியினால் உறைந்ததுதான் என்றும் கூறுகிறார்கள்.

அடிக்கடி இம்மாதிரி பனிக்கட்டிகள் விழ ஆரம்பித்திருப்பதால் வான ஆராய்ச்சியாளர்கள் கூறுவது அநேகமாக சரியாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இந்தப் பனிக்கட்டிகள் 5 பவுண்டு எடையிலிருந்து 14 பவுண்ட் எடை வரை இருப்பதாகக் கூறப்படுகிறது. இதுவரை ஒரு பனிப்பாறை விழுந்ததால் ஒரு ஆடு இறந்திருக்கிறது. ஒருவன் தெய்வாதீனமாகத் தப்பினான்.

## இலங்கையின் அடுத்த இந்திய ஹைகமிஷனர் யார்?

கொழும்பு, டிச. 6—

இலங்கையின் ஹைகமிஷனராக இருந்த தோழர் வி. வி. கிரி அப்பதவி காலம் முடிந்து இந்தியா சென்றுவிட்டதால் அடுத்தபடியாக யார் அப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என்ற கேள்வி இப்பொழுது எழுந்திருக்கிறது.

இப்பதவிக்கு ஒரு சிறந்த ராஜதந்திரியை நியமிக்க இந்திய சர்க்கார் விரும்புகிறது என்று சொல்லப்படுகிறது.

இங்குள்ள வட்டாரங்களில் சர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் பெயரும், சர். ஏ. ராமஸ்வாமி முதலியார் பெயரும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

அடுத்த ஹைகமிஷனர் நியமிக்கப்படும் வரை முதல் காரியதரிசி தோழர் என். இ. எஸ். ராகவாச்சாரியே ஆக்டிங் ஹைகமிஷனராக இருந்து வருவார்.

## குறைந்த செலவில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பிலும் எட்டாண்டுகள் வரை இலவசக் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

இவ்வாறிருக்கையில், உதவி டைரெக்டராயிருப்பவர் ஒருவர் பொதுமக்கள் பணம் அளித்தே தீர வேண்டுமென்றும், அதை ஆசிரியர் பெற்றோர்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்பதும் பொறுப்பற்றோர் கூறும் பேச்சாகவே இருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சியிலே கல்வியற்ற நம் நாட்டில், கல்வியைப் பரப்பும் வேலை எவ்வளவு பொறுப்புடன் கவனிக்கப்படுகிறது என்பதற்கு இத்தகைய நிகழ்ச்சிகள் தக்க சான்றுகளாகும்.

# ★ தமிழர் பண்பாடு ★

‘ஆரியர்—திராவிடர்’ என்று அர்த்தமற்றுக் கூச்சலிடுகிறோம் என்று அன்பர்கள் சிலர் எண்ணுகிறார்கள்—இன்னமும், ஏதோ ஒரு காரணத்துக்காக, வேண்டுமென்றே நாம் ஒரு கற்பனையை இட்டுக்கட்டி எடுத்து வந்திருக்கிறோம் என்று எண்ணுகிறார்கள்.

திராவிடர், தனி இனம், தனிப் பண்புள்ளவர்கள், என்பது தெளிவாகத் தெரியமுடியாத அளவுக்கு, வேறுபண்பாடுகள், இதனுடன் கூட்டிக் கலக்கப்பட்டதால், நாம். ஆரியர்—திராவிடர் என்று பேசுவது, சிலருக்கு அர்த்தமற்றதாகத் தோன்றுகிறது.

நாமாவது, அரசியல் கட்சிக்காரர்கள்—எனவே நமது பிரசாரத்துக்கு நோக்கம் தவறானதாக, ஏதேனும் கற்பித்து, பிரச்னையின் தூய்மையைக் கெடுக்கமுடியும் சிலரால்.

அரசியலில் கலந்து பணிபுரியாமல், கட்சிப்பூசல்களுக்கு அப்பால் நின்று, ஆராய்ச்சிக் கூடத்தில் அமர்ந்து, பல்வேறு விஷயங்களை, ஆராய்ந்து, கருத்துரைவழங்குபவர்கள், இந்தப் பிரச்னையைப்பற்றி, கற்பனையாக ஏதும் கூறவேண்டிய அவசியமில்லையல்லவா? அத்தகைய அறிஞரின் அபிப்பிராயத்தை இங்கு காட்டித் தருகிறோம், எமது பேச்சுக்குப் பக்க பலம் தேட அல்ல. பிரச்னை, தூய்மையானது. நல்லெண்ணமுடையோர் அனைவராலும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது—அலட்சியப்படுத்திவிடக்கூடியதல்ல என்பதை விளக்க.

தமிழருக்கு இருந்த கோட்பாடுகள் வேறு—பின்னர் அவர்களிடம் புகுத்தப்பட்ட கோட்பாடுகள் வேறு.

இதனை, சட்ட அறிஞர், ஜான்டி மேனி என்பார், விளக்கியுள்ளார். அது இது.

தோழர் ஜான்டிமேனி என்னும் சட்ட நிபுணர் தம்மால் எழுதப்பட்ட “இந்துலா அண்டு யூகேஜ்” (இந்து சட்டமும் ஆசாரமுறையும் என்ற புத்தகத்திலே தென்னிந்தியாவின் ஆரிய திராவிட சித்தாந்தம் பற்றி விவரித்திருப்பதன் சுருக்கம் வருமாறு:—

“தென்னிந்தியாவில் குடியிருந்து வருபவர் அனைவரும் திராவிட வகுப்பினர்தான். அவர்கள் பூர்வோத்திரம் நிறம் பாஷை, வர்க்கம் ஆகியவைகளில் ஆரியர்களிலிருந்து பெரிதும் வேறுபட்டவர்கள். ஆரியர்கள் தென்னிந்தியாவுக்குள் முதல் முதலாக எப்போது புகுந்தார்கள் என்பதற்கு நிச்சயமான ஆதாரம் எதுவும் இல்லை. கிறிஸ்துவுக்கு வெகு காலத்திற்கு முன்பு ஆரியர் தமிழ்நாட்டுக்குள் புகுந்திருக்கலாம் தென்னிந்தியாவில் முதல் முதலாகக் குடியேறிய ஆரியர்கள் யாவரும் தபசிகள்தான் அவர்கள் ரிஷிகள் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள்தான் முதன் முதலாகத் தமிழ்நாட்டில் ஸ்திரமாகக் குடியேறினார்கள். அவர்கள் தமிழ்நாட்டைப் போரிட்டு ஜெயிக்கவில்லை. ஆனால் அங்கு ஒண்டிப் பிழைத்து வந்தார்கள்.

## ஆரியர் ஆசாரத்தை தமிழர் ஏற்கவில்லை

அக்காலத்தில் தென்னிந்தியர் ஆரியர்களிடத்தில் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொண்டதில்லை. அவர்கள் காலப்போக்கில் அரசியல் ஆதிக்கம் பெற்றபிறகுதான், திராவிடர் அவர்கள் சூழ்ச்சிக்குள் அகப்பட்டுப் போயினர். தென்னிந்திய ஜனத்தொகையில் தற்காலம் 100-க்கு 3-பேர் வீதமே பிராமணர்களாயிருக்கிறார்கள். இந்தப் பிராமணர்கள்தான் ஆரியர் எனப்படுவோர். ஏதோ சொற்ப வைசியரும், க்ஷத்திரியரும் தென்னாட்டில் இருக்கலாம். ஆனால் அவர்களின் எண்ணிக்கை மிகமிக அற்பமானது. பிராமணர்கள் பிராமணர்களல்லாத தென்னிந்திய பெருங்குடிமக்கள் அனைவருக்கும் ஜாதிமுறை கற்பித்து அவர்களைத் தங்களைவிட கீழ்ஜாதியார் என்று மதித்து அவர்களுக்குத் தங்கள் விருப்பப்படி “சூத்திரர்” என்று பெயரிட்டுக்கொண்டார்கள். உண்மையில் அந்நியர்களாகிய ஆரியர்களுடைய சட்ட திட்டங்களையும் ஆசார அனுஷ்டானங்களையும் தென்னிந்தியர் ஏற்றுக்கொண்டதில்லை.

பதினெட்டாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் மதுரையில் வசித்து வந்த பூஷே என்ற பாதிரியார், தமிழர்களுக்குச் சட்ட சாஸ்திரப் புஸ்தகங்கள் இருந்ததில்லையென்றும், புராதன ஆசார அனுஷ்டான (மாமூல்) வழக்கங்களை அனுசரித்தே அவர்கள் நடந்துகொண்டார்கள் என்றும் எழுதிவைத்திருக்கிறார். அதே காலத்திய தென்னிந்தியரைப் பற்றி எழுதிய அப்பேடுபே என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் குடிகளின் சிவில் கிரிமினல் விவகாரங்கள் சம்பந்தமாகச் சில சட்ட சாஸ்திரங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ் மக்கள் அவைகளை லட்சியம் செய்வதில்லை. எனவே தமிழர்களுடைய சிவில் கிரிமினல் வழக்குகள் சாதாரண பகுத்தறிவுப்படியும், கர்ண பரம்பரைப் பழக்கவழக்கப்படியும் தீர்த்து வைக்கப்படுகின்றன.

தோழர் எம். லியோன்சார்க் என்ற அறிஞர், புதுச்சேரி கோர்ட்டின் சென்ற நூற்றாண்டின் தீர்ப்புகளைப் பார்த்தால் தமிழர்களுக்கு அக்காலத்தில் சமஸ்கிருத சட்ட ஞானமில்லையென்று தெரிகிறது. தமிழர்கள் ஸ்ரீதனம், சபிண்டா முதலிய சாதாரண சமஸ்கிருத வார்த்தைகளுக்கு அர்த்தமே தெரிந்திருந்ததில்லை என்று தெரிகிறது. பிற்காலத்தில் நாளாக நாளாக கோர்ட்டு வழக்குகளில்பிராமணப் பண்டிதர்களின் சாஸ்திர அபிப்பிராயம் கேட்க ஆரம்பித்தார்கள். அதன் பிறகே ஆரிய சாஸ்திரங்கள் தமிழர் சட்டங்களில் கொஞ்சங்கொஞ்சமாக இடம்பெற சந்தர்ப்பம் ஏற்பட்டுவந்தது என்று எழுதியிருக்கிறோம்.

இறந்தவர்கள் உயிரோடிருக்கும் தங்கள் சுற்றத்தார்களுக்கோ வேறு எவருக்கோ தீங்கு செய்யமுடியும் என்ற நம்பிக்கை தமிழர்களுக்குக் கிடையாது. இறந்தவர்கள் தங்களுக்கு நன்மை செய்யமுடியும் என்ற நம்பிக்கையும் தமிழரிடம் இருந்ததில்லை. ‘புத்’ என்னும் நரகம் உண்டு என்பதைத் தமிழர் நம்பியதில்லை. புத்திரன் தன் பெற்றோர்களை நரகத்திலிருந்து காப்பாற்றுவான் என்ற கோட்பாடு ஆரியர்களுடையது. விவாகம் மத சம்பிரதாயம் பெற்றது என்பது தமிழர் கொள்கையல்ல. கல்யாணத்திற்கு மதப்பிரதாபம் கற்பித்தது ஆரியர்கள்தான்; தமிழரல்ல.

“திராவிடநாடு”

## தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

**8—12—50**

**அய்யம்பேட்டை (காஞ்சிபுரம்)**

தோழர்கள் சி. என். அண்ணாதுரை, அரங்கண்ணல், தில்லைவில்லாளன்.

**திருவொற்றியூர்**

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன்.

**9—12—50**

**சைதாப்பேட்டை**

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன்.

**10—12—50**

**தூத்துக்குடி**

தோழர் ஈ. வே. கே. சம்பத்.

**திருவாரூர்**

தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன், அரங்கண்ணல், என். எஸ். இளங்கோ, ப. உ. சண்முகம், கே. ஆர். செல்லமுத்து.

**மதுராந்தகம்**

தோழர்கள் சி. என். அண்ணாதுரை, தில்லை வில்லாளன், திண்டிவனம் தங்கவேலு, சதுரை அழகரசு.

## சணல் வாணிபத்தில் ரூ. 12 கோடி நஷ்டம்

இந்திய அரசாங்கம் வெளிநாடுகளுக்குச் சணல் ஏற்றுமதி செய்யும் விஷயத்தில், சணல் ஏற்றுமதி வரி உயர்த்துவதை உடனடியாகக் கவனிக்காமல் தாமதம் செய்தபடியால் மாதம் ஒரு கோடி ரூபாய் விகிதம் 12 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. நிர்வாகப் பொறுப்பேற்றவர்களின் திறமையின்மை காரணமாக எங்கெந்த வகையில் பண நஷ்டம் ஏற்படுகிறதென்பதை இது போன்ற நிகழ்ச்சிகள் நன்கு விளக்குகின்றன.

## மத்திய ஆட்சியின்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேவையைவிடக் குறைந்த அளவில் வகுக்கப்பட்டது. அதையும் பாதியாகக் குறைத்திருப்பதாகக் கூறுவதென்றால், மத்திய அரசாங்கத்தின் ஆணவப் போக்கை என்னென்பது! இங்குள்ளவர்கள் இளிச்சவாயர்களென்று கருதியே இவ்வாறு அது நடக்கிறதென்பது நன்கு தெரிகிறதல்லவா?

இத்தகைய செய்திகளிலிருந்து மத்திய அரசாங்கம் சென்னை மாகாண மக்களை உணவு-உடை விஷயங்களில் மாற்றாந்தாயன்புடன் நடத்தி வருகிறதென்று கூறுவதில் தவறில்லையல்லவா?

நம் மாகாணத்தில் ஜூன் முதல் ஆகஸ்ட் வரை 1,29,102 பேல் நூல் உற்பத்தியாகியிருக்கின்றன. இதில் நம் கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்பட்ட நூல் 87,000 பேல்களாகும். ஆனால், நம்மவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பது 61,044 பேல்களேயாகும்.

இவ்வாறு நாம் உற்பத்தி செய்யும் நூலை வாங்கிக்கொண்டுபோய்ப் பிறர் வாழ அளித்துவிட்டு, நம்மவர் பட்டினியால் சாகச்செய்வதென்றால், இவைவிடக் கொடிய செயல் வேறு ஏதேனும் இருக்கமுடியுமா? இதை நாம் கேட்டால், பக்தவத்சலங்களும், காமராஜர்களும் நம்மீது காய்ந்து விழுவதில் பயன் என்ன? நம் நடவடிக்கைகளை இந்தக் காங்கிரஸ் அரசாங்கம் கவனித்து வருவதாகக் கூறிக்கொள்வதில் பயன் என்ன? நம்மைக் கவனித்துவருவதைவிட நாட்டு மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்தத் துரோகத்தில் கவனம் செலுத்தினால் எவ்வளவோ பயன் தருமே! மத்திய அரசாங்கத்தைக் பணியவைப்பதில் கவனம் செலுத்துங்கள் தோழர்களே, நம் நாட்டு உற்பத்திப் பொருளை வேறு எங்கும் அனுப்பாதிருக்க மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பாதிருக்க வேலை செய்வதில் கவனஞ் செலுத்துங்கள் தோழர்களே!

## ஏஜெண்டுகளுக்கு!

“மாலைமணி” வெளியூர் ஏஜெண்டுகள் தங்களுக்கு வரும் தபால் பார்சல்களை தபாலாபீஸுக்குச் சென்று விண்டோ டிலவரி எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஜூலை மாதம் பட்டியல்படி பாக்கியுள்ள ஏஜெண்டுகள் தங்கள் பாக்கியை இம்மாதம் 10-ந் தேதிக்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படி அனுப்பிவைக்காதவர்களுக்கு மேலும் பத்திரிகை அனுப்புவது கண்டிப்பாக நிறுத்தப்படும்.

“மானேஜர்”

## கழக பேச்சாளர்கள்

திராவிட முன்னேற்றக் கழக பேச்சாளர்கள் தங்களுடைய நிகழ்ச்சிகளை அவ்வப்போது “மாலைமணி” அலுவலகத்திற்கு அனுப்பித் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## இனி நடப்பவை

"பொள்ளாச்சி: 10—11—50 ஞாயிறு இரவு 8 மணி அளவில் மார்க் கட்ரோடு எம். கே. பாவா அவர்கள் மளிகையில் இவ்வூர் தி. மு. வாலிபர் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும் பல முக்கிய அலுவல்கள்பற்றி ஆலோசிக்கவிருப்பதால் உறுப்பினர் ள் தவருது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறது."

* * *

சதுப்பேரி: 10—12—50 அன்று . மு. கழக இரண்டாம் ஆண்டு விழா மாலை 4-30 மணிக்கு எஸ். கோவிந்த மி தலைமையில் மாபெரும் பொதுக் ட்டம் நடைபெறும். அவ்வமயம் வ. . மா. தி. மு. கழக செயலாளர் கே. ரமண்யம், வி. தூயமணி அவர் ளும் மற்றும்பலர் பேசுவார்கள். அன் இரவு 9:30 மணிக்கு சதுப்பேரி தி. கழக செயலாளர் வி. கே. பெரு ள் தலைமையில் 'நல்லமுடிவு' என்ற டகம் உள்ளூர் தோழர்களால் நடத் ப்படும்.

* * *

கோலார் தங்கவயல்: 10—12—50 ஞாயிறு மாலை 4 மணிக்கு உயர் நிலைப் பள்ளி மைதானத்தில் தோழர் என். சி. சபாபதியவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும் அது சமயம் போர்வாள் ஆசிரியர் ம. இளஞ்செழியன் பி.ஏ.ஆனர்ஸ், பெங்களூர் தோழியர் விஜயலட்சிமி அம்மையார், தங்கவயல் தோழர் டி. கே. சின்னதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

செயங்கொண்டம்:—திராவிட முன்னேற்றக் கழக முதலாவது ஆண்டு விழாவும், திராவிட மாணவர் முன்னேற்றக் கழக துவக்க விழாவும், 17-12-50 தேதி காந்தி பூங்காவில் மாலை 5 மணிக்கு குத்தாலம் என். சி. பன்னீர்செல்வம் தலைமையில் ஈரோடு "புது வாழ்வு" ஆசிரியர், ஈ. வெ. கி. சம்பத், தஞ்சை "எரிமலை" ஆசிரியர், எ. கே. வேலன் முதலியவர்கள் பேசுவார்கள்.

* * *

தேவகோட்டை: நேதாஜி சதுக்கத்தில் 15-12-50 வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம், திருவண்ணாமலை நகராண்மைக் கழகத் தலைவர், தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் மையில் நடைபெறும். தோழர்கள் ரா. நெடுஞ்செழியன், எம். எ., ராம. அரங்கண்ணல், கவிஞர் கண்ண சன் முதலியவர்கள் பேசுவார்கள்.

* * *

சைதாப்பேட்டை:—9-12-50 தேதி மாலை 6-மணிக்குமேல் சைதாப் பட்டை சடையப்ப முதலி தெருவில் . மு. க. முதலாவது ஆண்டுவிழா பெரும் அவ்வமயம் தோழர் ரா. நெடுஞ்செழியன் தோழியர் சத் யவாணிமுத்து மற்றும் பலர் கலந்து காள்வார்கள்.

### பெண்ணாடத்தில் முதியோர் கல்வி

பெண்ணாடம், சோழன் நகரில் -11-50 ல் திட்டக்குடி தாசில் ார் முதியோர் கல்வி சாலையைத் திறந்து வைத்தார்.

செயலாளர் வி. எம். எ. சுப்ர மண்யம் பிள்ளை. முதியோர்களைப் படிக்கும்படி தூண்டி, மேற்படி கழ சேர்த்து ஒத்துழைத்தவர் ர். தாஸ். (தி. மு. கழகம் ...)

## நடமாடும் கோயில்கள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளப்பமுடியாது என்று கூறப்பட்டதாம்.

தலைவராக வருகிறவர்கள் தத்தம் சமயக் கோயில்களை அரசாங்க மாளிகையில் கட்டிக்கொண்டிருப்பதெனின், அரசாங்க மாளிகை கோவிற் கூடாகிவிடும். மேலும், தலைவர்களாக வருகிறவர்கள் தங்களை நவாபுகளென்று கருதி விடாமல் பொது மக்களுள் ஒருவராக இருந்து வாழ்க்கை நடத்த விரும்புவதே ஒழுங்கான செயலாகும். தலைவருக்கெனத்தனி ஒரு கோவில் கட்ட வேண்டுமென்பதும் அதற்குப் பொது மக்கள் பணத்தைப் பெருவாரியாகச் செலவிட வேண்டுமென்பதும் எந்த வகையிலும் பொருத்தமான செயலாக மாட்டாது.

தலைவர் அழுத்தமான சமயப் பற்று உடையவரென்ருல், அவர் தம் வீட்டுக்குள் தம் சமயக்கொள்கையை வைத்துக் கொள்வதன் மூலம் பிற மக்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டியதிருக்க, அவரே, இவ்வாறுதலைவருக்கெனத் தனிக் கோவில் என்று தொடங்கினல், பிற குட்டித் தலைவர்களும் தத்தம் மனம்போன போக்கில் தர்பார் செய்யத் தொடங்கி விடுவார்கள் என்பதில் ஐயமுண்டோ?

மேலும் பின்னல்வரும் தலைவர்களுக்கும் இக் கோவில் பயன்படும் என்று கட்டுவதும் பொருத்தமான வாதமன்று. பின்னல் வரப் போகும் தலைவர்களை இந்துக்களாகவே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஏதாவது விதியுண்டா? அப்படியிருக்க, ஒரு முஸ்லிம் தலைவராக வந்தால், அவருக்கென மஸ்ஜித் கட்டிக் கொள்ளவும், சமணர், பௌத்தர் யூதர் எனப் பல சமயங்களிலிருந்தும் வரக் கூடிய தலைவர்களெல்லாம் தத்தம் மனம் போன போக்கில் தனிக் கோவில்களைக் கட்டிக்கொள்வதில் பொது மக்கள் பணத்தைச் செலவிடுவதென்ருல். இது நியாயமான செயல்தானு? நாட்டு மக்களின் நன்மைக்குகந்தது தானு? காங்கிரஸ் கட்சிக்காரர்கள் போக்கு எப்படியிருக்கிறதென்பதைப் பொது. மக்கள் அறிந்துகொள்ள இது ஒரு சிறு சான்ருகும்.

### இமயத்தில் 24,340 அடி உயரச் சிகரம்

லண்டன், டிச. 6—

ஹிமாலய மலையைச் சேர்ந்த திருசிரமீர் என்கிற 24,340 அடி உயரமுள்ள மலையின் உச்சி வரை ஒரு நார்வேஜியர் ஏறிச் சென்று திரும்பியிருக்கிருர்.

இந்த அசாத்யமான காரியத்தை சாதித்தவர் இதுவரை யாருமில்லை.

இவருடைய பெயர் ஆர்னே நெஸ் என்பதாம். இவர் தத்துவ சாஸ்திர போராசிரியராக இருந்து வருகிருர்.

மலை மீது ஏற முயன்றபோது அங்கு வசிக்கும் கிராமவாசிகள் உச்சியில் பேய் பிசாசுகள் இருக்கின்றன. ஆகவே இந்த வீண் முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்று தடுத்தனராம்.

### போத்தனூர் தி. மு. கழக உறுப்பினர் தேர்தல்

போத்தனூர் மாவட்ட தி. மு. கழக துணைச் செயலாளர் கே. ஆர். எஸ். மணி எழுதுவதாவது:

3-12-50 மேற்படி கழக கட்டிடத்தில் தோழர் அருள் நாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கீழ்க் கண்டவர்கள் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர் பொன்னுசாமி, துணைச் செயலாளர் கே. ஆர். எஸ். மணி, பொருளாளர் மதியழகன், விளம்பர உறுப்பினர்கள் எ. கே. இராசு, எ. சிவம், நிர்வாகி பழனியப்பன், துணை ப. சுப்பையன்.

அதே சமயம், 10-12-50 ல் போத்தனூர் தி. மு. கழக துவக்க விழாவை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அதில் ஈரோடு அப்பாவு, பொள்ளாச்சி ராமநுஜம், செழியன், இளங்கோ பேசுவார்கள்.

### அரிசி விற்பனைக்கு ஆஸ்திரேலியாத் தடை

ஸிட்னி, டிச. 6—

இப்போது முதற்கொண்டு வருகிற எப்ரல் வரை அரிசியை ஆஸ்திரேலியாவில் எங்கும் விற்கக்கூடாது என்று ஆஸ்திரேலிய சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

அடுத்த ஆண்டு அறுவடை வரையில் சமாளிக்க போதிய அளவுக்கு அரிசி ஸ்டாக் இல்லை என்று கூறப்படுகிறது.

ஆஸ்பத்திரிகளுக்கும் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் ஆசியர்களுக்கும் இருக்கிற அரிசி ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.


### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| 1. ஆண்டு | ரூ. | 12—8—0 |
| 6. திங்கள் | ரூ. | 7—0—0 |
| 3. திங்கள் | ரூ. | 3—8—0 |

தனிப்பிரதி அரையணு மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

### விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

**'மாலைமணி" பதிப்பகம்**

மண்ணடி-சென்னை-1



## தேவை

"மாலை மணி" விற்பனை செய்ய கீழ்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை விவரங்களுக்கு எழுதவும்.

மதுரை
திருச்சி
கும்பகோணம்
மாயவரம்
வேலூர்
திருவண்ணமலை

**"மாலைமணி" பதிப்பகம்**

மண்ணடி சென்னை—1.


## வானொலி

**(8—12—50—வெள்ளி)**

சென்னை
மீட்டர் 211·3

**காலை**

7-0 ஸ்வாகதம்
7-15 தமிழில் செய்தி
7-30 ஜயலக்ஷ்மி ராகவாச்சாரி பாட்டு
8-0 ஆங்கிலத்தில் செய்தி
8-15 ஒலிபரப்பு முடிவு

**பிற்பகல்**

1-30 ஆங்கிலத்தில் செய்தி
1-50 சினிமா பாட்டுகள்
2-0 தமிழில் செய்தி
2-45 ஒலிபரப்பு முடிவு

**மாலை**

4-0 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-0 ஒலிபரப்பு முடிவு
5-30 அலமேலு பட்டாபிராமன் பாட்டு
6-0 ஆங்கிலத்தில் செய்தி
6-20 வி. சோமசுந்தரம் பாட்டு
7-0 குரல்வகை
7-15 தமிழில் செய்தி
8-0 பரம்பரை ஆண்டி நாடகம்
8-15 எம். எல். வசந்தகுமாரி
9-0 ஆங்கிலத்தில் செய்தி
10-30 ஒலிபரப்பு முடிவு

திருச்சி
மீட்டர் 395·8

**காலை**

7-10 ஸ்தோரம்பம்
7-15 தமிழில் செய்தி
7-15 காலை இசை
8-0 ஆங்கிலத்தில் செய்தி
8-30 ஒலிபரப்பு முடிவு

**பிற்பகல்**

1-0 கதம்பம்
1-30 ஆங்கிலத்தில் செய்தி
1-50 மன்னார்குடி கே. சாவித்ரி அம்மாள் கோட்டுவாத்யம்
2-0 தமிழில் செய்தி
2 10 கே. ஆர். ஜாதவ் கோஷ்டி கானம்
2 45 ஒலிபரப்பு முடிவு

**மாலை**

5-30 திருவாரூர் எஸ். பாலகிருஷ்ணன் நாகஸ்வரம்
6-0 ஆங்கிலத்தில் செய்தி
6-15 ஆர். வைதேகி ராஜகோபாலன் பாட்டு
6-30 கிராம நிகழ்ச்சிகள்
7-15 தமிழில் செய்தி
7-30 எம். கே. தியாகராஜ பாகவதர் பாட்டு
7-45 ஜனத் தொகை
8-0 வைதேகி ராஜகோபாலன் பாட்டு
8-30 திருவாரூர் எஸ். பாலகிருஷ்ணன் நாகஸ்வரம்
9-0 ஆங்கிலத்தில் செய்தி
9-30 இசை வேளை
10-0 ஒலிபரப்பு முடிவு

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I